**முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்**

**அசல் வழக்கு எண்.37/2020**

2026–ம் ஆண்டு **ஜீலை மாதம் 29–ம் தேதி** வாதி தரப்பு சாட்சி **வா.சா.2–ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுந்தரசேகரன் | வா.சா | 2 |
| த/க/பெயர் | நடேசன் | தொழில் | பூச்சி மருந்து வியாபாரம் |
| கிராமம் | கொல்லபட்டி | வட்டம் | திருச்செங்கோடு |
| வயது | 73 | நாள் | 29.07.2026 |

**முதல் விசாரணை :–**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 2ம் சாட்சி ஆவேன். நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்னிடம் காட்டப்படும் கடந்த 23.03.2017 தேதியிட்ட கடனுறுதி சீட்டில் சாட்சிகள் என்ற இடத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதாகும். கனகலட்சுமி என்பவரிடம் பழனிவேல் என்பவர் ரூ.6 லட்சம் கடன் பெற்றுக்கொண்டு, அந்த கடனுக்காக என் முன்னிலையில் ஒரு கடனுறுதி சீட்டு எழுதிக்கொடுத்தார். மேற்படி கடனுக்காக சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன்.

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct. |
| Sd/.M.Ramachandran,<br>Principal Subordinate Judge, Tiruchengode. |